Registered No. M. 2330

"SIDDHANTHAM"

Vol. 40—No. 2

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

40	பராபவ மாசி 1967 பிப்ரவரி	இதழ்

உள்ளுறை

உள்ளுறை	பக்கம்
ஒலிபரப்பு	... 9
சமாஜ 61ஆம் ஆண்டுவிழா வரவேற்புரை	... 11
திருப்புறம்பயம்	... 19
தமிழ்த் தெய்வ வாழ்த்து	... 24
திருப்புகழ் மணி	... 26
ஓர் ஐய வினு	... 29
மதிப்புரை	... 31
சமாஜச் செய்திகள்	... 34
மாநாட்டு வரவு செலவு கணக்கு	... 37
சமாஜ 61ஆம் ஆண்டறிக்கை—அநுபந்தம்	...1–12

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,

உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

பிற செய்திகள்

தவத்திரு சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் ஆறாவது ஆண்டுக் குருபூசை

நமது சமாஜப் பேரன்பரும் பூர்வாசிரமத்தில் சிவக் கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் என்ற பெயரில் விளக்கமாக அறியப்பட்டவருமான, தவத்திரு சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகளின் ஆறாம் ஆண்டுக் குரு பூசை விழா கோயம்புத்தூரை அடுத்த திருப்பேரூரில் சுவாமிகளின் சமாதி மண்டபத்தில் 20—1—67 வெள்ளிக்கிழமை சிறப்புடன் நடைபெற்றது.

அன்று காலை 10-மணி அளவில் திருமுறைச் செல்வர் வித்துவான் திரு. S. அருணாசலம் பிள்ளை அவர்கள் குழுவினரின் தேவார இன்னிசையுடன் மகாபிடேகம் தொடங்கப் பெற்றது. இலக்கண நிறைகடல் பண்டித அ. கந்தசாமி பிள்ளை அவர்கள் சுவாமிகள் பற்றிய பல பழைய இனிய நிகழ்ச்சிகளை அழகாக எடுத்துக் கூறி, அதன் தொடர்ச்சியாக இயற்பகை நாயனார் சரிதம் பற்றி நகைச் சுவையும் புலமைச் செறிவும் கொண்ட ஓர் அழகிய சொற் பொழிவாற்றினார்கள். பிறகு, கோவை-கவியரசு வித்துவான். கு. நடேச கவுண்டர் அவர்கள் இந் நாயனார் புராணத்தின் முதல் திருப்பாட்டை மிக அழகாக எடுத்து விரித்துரைத்தார்கள். கோவை-சைவத்திரு. தா. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் சுவாமிகள் பற்றிப் பேசினார்கள். நமது சமாஜத் தலைவர் வித்துவான் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, I.A.S. (Retd.) போன்ற பலர் சுவாமிகளின் வழிபாட்டு முறைகளும் அவர்கள் வகுத்த கொள்கைகளும் விரிந்த அளவில் பயனளிக்கவும், அவர்கள் இயற்றிய நூல்கள் எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரவும் வேண்டி ஆசிச் செய்திகள் அனுப்பியிருந்தார்கள்.

நண்பகலில் மாகேசுர பூசையுடன் குருபூசை விழா இனிது நிறைவேறியது.

சங்ககிரி அருள்நெறித் திருக்கூட்டப் பன்னிரண்டாவது நிறைவு விழா (14—1—67) சனிக்கிழமையன்று சோமேஸ்வரர் ஆலயத்தில் சிறப்புற நிகழ்ந்தது. பல பெருமக்கள் சமயச் சொற்பொழிவாற்றினர்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 40	பராபவ மாசி 1967 பிப்ரவரி	இதழ் 2

ஒலிபரப்பு :-

நம்மைப் பாதிக்கின்ற செய்திகளும், நிகழ்ச்சிகளும் உலகில் நம்மைச் சுற்றியும் நிகழப் பார்க்கின்றோம். சிலவற்றையேனும் குறிப்பிடா திருக்க முடியவில்லை.

திருப்புகழ் மணி :-

திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயரவர்கள் சென்ற மாதம் முருகன் திருவடிநிழலை அடைந்தார்கள். அவர் பற்றிய ஒரு குறிப்பு பின்னர் உள்ளது. பத்திரிகை வேலை அச்சகத்தில் தாமதமானபடியால் இக் குறிப்பு சென்ற மாதம் வர இயலவில்லை.

பசுவதைத் தடை :-

இப் பெயரால் வடநாடு முழுமையும் ஏற்பட்ட அலங்கோலங்களை நாம் நன்கறிவோம். சைவருக்குப் பசு மிகவும் புனிதமான ஓர் உயிர். நம் பெருமான் ஆவினில் ஐந்து உகந்தாடுபவன் அல்லவா? நம் மக்கள் கறக்கிற வரைக்கும் பசுவின் பாலைக் கறந்து கொண்டு முடிவில் மாட்டைத் தோல் உரிப்பவனிடம் விற்று விடுகிறார்கள்,

வயதான பசுவைக் காப்பாற்ற நாம் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகச் சமுதாயமாகவும்–முன் வராதபோது, பசுவதையைத் தடை செய்ய வேண்டுமென்று சொல்ல நமக்கு எவ்வாறு நா எழுக்கூடும்?

துறவியும் மனைவியும் :–

பூரி சங்கராசாரிய சுவாமிகள் பசுவதைத் தடைக்காக 73 நாள் உண்ணுவிரத மிருந்து உபவாசத்தை முடித்திருக்கிறார். சமயத் தலைவர்கள் இப்படி அரசியல் விஷயங்களில் தலையிடவேண்டுமா என்பது ஒரு முக்கிய விஷயம். எனினும், அதுபற்றி நாம் இங்கு ஆராயவில்லை. இச்செய்தி வெளியான ஆங்கிலப் பத்திரிக்கையில் இதைத் தொடர்ந்து, சங்கராசாரியாரின் மனைவியும் இதன் பொருட்டுக் கடவுளுக்கு நன்றி செலுத்தினர் என்ற செய்தி காணப்படுகிறது. அதைப்பார்க்கும்போது நமக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. சங்கராசாரியர் ஜகத்குரு என்று சொல்லிக் கொள்கிறார். ஆசாரியராகிறவர், பொதுவாகத் துறவியாக இருப்பாரானால், நைட்டிகராயிருப்பார் என்பதே சைவ சம்பிரதாயம். இல்லறத்தாராயிருந்தவர் துறவியாகி ஆசாரியராவது மரபுக்கு முரண். காஞ்சி மடாதிபதிகள் நைட்டிகப் பிரமசாரியே. இன்றுள்ள ஆசாரிய சுவாமிகளும் அப்படியே; ஒழுக்கத்தாலும் பொறுமையாலும், சீலத்தாலும் மிகவும்உயர்ந்தவரானவர் சுவாமிகள். தமிழ்நாடு இவர்களைப் பெருமையோடு நினைவில் கொள்ளும். தமிழ்நாட்டார் பூரி சுவாமிகளும் அவருடைய மனைவியார் 54 வயதான காயத்திரி தேவியும் மூன்று புதல்வர்களும் பத்திரிக்கைக்குச் செய்தி கூறி இருப்பதைப் பார்க்கும்போது, ஆசாரிய ஸ்தானம் பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்து மாறி நம் மனம் சமாதானம் அடைய மறுக்கிறது. அதிகம் சொல்வது மிகை.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சென்னை
சைவ சித்தாந்த மகா சமாஜம்
61-ஆம் ஆண்டுவிழா

திருச்சிராப்பள்ளித் தேவர் மன்றத்தில்
மகாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர்
'திருக்குறள்வேள்' G. வரதராஜப் பிள்ளை B.A.,
அவர்கள் நிகழ்த்திய

வரவேற்புரை
(30—12—1966)

பெரியோர்களே! தாய்மார்களே!

திருச்சிராப்பள்ளி நகரத்தில் இவ்வாண்டு சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆண்டுவிழா நடைபெறுவது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது. இந்நகரத்தின் பண்டைய பெருமையினையும் இந்நாளைய வளர்ச்சியினையும் நோக்கும்போது இவ்வாண்டு விழா இங்கு நடைபெறுவது எத்துணைப் பொருத்தமும் பயனும் உடையதாய் உள்ளது என்பது விளங்கும். இந்நகரின் நடுவில் திகழும் தாயுமானவர் ஆலயம் வானளாவி உயர்ந்து கண்டோரைக் கவரும் தன்மையில் அமைந்து சிறப்புச் செய்கிறது. சைவ சமயத்தின் கண்ணாய் விளங்கும் ஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிச் செய்த 'நன்றுடையானை' என்ற பதிகத்தைக் கூறும்போது நம் உள்ளமெல்லாம் குளிர்கின்றது. சிவ பூசைச் செல்வராகிய சாரமா முனிவர் இத்தலத்திலே பூசித்துப் பேறு பெற்றார். மேலும் தவயோகியான மௌனகுரு தாயுமானப் பெருந்தகைக்கு உபதேசம் செய்த பெருமையும் இதற்கு உண்டு. மகேந்திரவர்ம பல்லவன்

சைவஞானது பற்றிக் குறிப்பிடுகின்ற சாசனம் இம்மலைக் கோயிலுள் இருக்கிறது. இனி, சோழ சாம்ராஜ்பத்துக்கு உறையூர் தலைநகராக நெடுங்காலம் இருந்தது என்பதும் யாவரும் அறிந்ததே.

பண்டைய காலத்தில் சமய, அரசியல் துறைகளில் இந் நகரம் பெருமை பெற்றிருந்தது போன்று இக்காலத்தில் தொழில் துறையில் பெருமைபெற்று விளங்குகிறது. நக ரத்தின் புறத்தே நூற்பு ஆலையும், கொதிகலத் தொழிற்சாலை யும், துப்பாக்கித் தொழிற்சாலையும் இவற்றினை இயக்குவதற் குரிய பயிற்சியளிப்பதற்குப் பொறியியல் கல்வி நிலையங்க ளும், தொழில் செய்வோர் வாழ்வதற்குரிய தங்குமிடங்க ளும் பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கின் றன. இங்கு அமர்ந்திருக்கும் பெருமான் சென்றடையாத திருவுடையான் ஆதலின் இந்நகரம் இயற்கை வளத்தோடு தொழில் வளமும கலந்து மிளிர்கின்றது. இத்துணைச் சீரும் சிறப்பும் அமைந்த நகரத்தில் பழமையில் மிக்க சமயத் தின்பேரால் இயங்கி வரும் மகா சமாஜ ஆண்டுவிழா நடை பெறுவது மிகவும் பொருத்தமும் பயனும் உடையதாகும்.

முதன் முதலாக இந்நகரத்தில் மகா சமாஜத்தின் நான் காவது ஆண்டு விழா 1909ஆம் வருடத்தில் சர். ஏ. கனக சபை அவர்களின் தலைமையில் தேசீய உயர்நிலைப்பள்ளி சரசுவதி மன்றத்திலும், இரண்டாவதாக மகா சமாஜத்தின் முப்பத்தாறுவது ஆண்டு விழா 1941ஆம் வருடத்தில் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் அவர்கள் தலைமையில் தாயுமானவர் ஆலயம் நூற்றுக்கால் மண்டபத்திலும் சிறப்பாக நடைபெற்றன. மூன்றுவதாக இப்போது அறுபத்தொன்றுவது ஆண்டு விழா காஞ்சிபுரம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் நடைபெற வுள்ளது என்று எண்ணும்போது எத்துணைப் பெருமை யும் மகிழ்ச்சியும் உண்டாகின்றன. சைவ சித்தாந்த மகா

சமாஜம் அறுபது ஆண்டுகளுக்கு மேலாகச் சைவ சமயக் கொள்கைகளைத் தமிழ் மக்கள் வாழ்கின்ற இடங்களில் எல்லாம் சலியாது பரப்பி வருகின்றது.

சைவ சமயத்தின் சீரிய உண்மைகள் மக்கள் மனத்திலே ஊன்றிவிடுமானால் அவர்கள் வாழ்வு செம்மை அடைவதோடு வாழ்வின் பயனையும் அடைவார்கள் என்பது உறுதி.

எல்லாப் பிறப்புக்களிலும் மானுடப் பிறப்பே மிகவும் சிறப்புடையது. இப்பிறப்பில்தான் நன்மை எது? தீமை எது என்று அறியமுடியும். மேலும் தீமையால் துன்பமும், நன்மையால் இன்பமும் உண்டாகும் என்று அறிந்து துன்பத்தை விலக்கி இன்பத்தைப் பெறுவதற்கேற்ற முயற்சியில் தலைப்படவும் கூடும்.

"எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்"

என்றார் தாயுமானப் பெருந்தகையார். இனி, இவ்வின்பம், சிற்றின்பம் பேரின்பம் என இரண்டு வகைப்படும். சிறிய இன்பத்தையுடைய பொருளை நாடினால் சிறிய இன்பம் கிடைக்கும்; பெரிய இன்பத்தையுடைய பொருளை நாடினால் பேரின்பம் கிடைக்கும். உலகத்திலே பெறக்கூடிய இன்பம் சிற்றின்பம் என்பது அனுபவத்தில் தெரிகிறது. அது முதலில் இன்பமாய்ப் பின் துன்பமாய் மாறிவிடுகிறது. ஏன்? உலகப் பொருள்கள் எல்லாம் நிலையான பொருள்கள் அல்ல. அவை தோன்றுகின்றன, இருக்கின்றன, மறைகின்றன. ஆதலின் அவற்றால் வரும் இன்பமும் நிலையாதவும், அழியக்கூடியனவுமாம். இனி, இவற்றையெல்லாம் தோற்றுவித்து இன்பத்தைக் கொடுத்தருளுவதற்கு ஒரு கருத்தா வேண்டும். அது நிலையான பொருளாகப் பேரின்பப் பொருளாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் இவ்வுலகப் பொருள்களைத் தோற்றுவித்து நிலைத்த இன்பத்தைக்

கொடுக்க முடியும். ஆதலின் நிலையில்லாத சிற்றின்பத்தைத் நல்கக் கூடிய உலகப் பொருள்களை விட்டு நீங்கி, நிலையான பேரின்பத்தை அளிக்கவல்ல பரம்பொருளை அடைதல் வேண்டும். அப்பரம்பொருள் மங்கலப் பொருளாதலின் சிவம் என்று கூறப்பெறுகிறது.

அப்பரம்பொருள் எங்கோ அடையமுடியாத வண்ணம் நெடுந் தொலைவில் இல்லை. அது அகத்தே உயிர்க்குயிராய் உடனும், புறத்தே உலகப் பொருளோடு கலந்தும் உள்ளது.

உயிரோடு உடனாய் இருந்து வினைக்கீடாக உலகப் பொருள்களோடு கலந்து இருந்து நியதியாக இயக்கியும் உதவுகின்றது. இனி, இவற்றுக்கு வேறாய் இருந்து உலகப் பொருள்களுக்கு அந்தம் ஆதியைச் செய்கின்றது. பரம்பொருள் இருக்கும் இயல்பினைச் சகலாகம பண்டிதராகிய அருள்நந்தி சிவம் "ஒருவனே எல்லாமாகி அல்லனாய் உடனுமாவன்" என்று விளக்குகின்றார்.

"அவையே தானேயாய்.........நிற்கும் அன்றே" என்ற ஸ்ரீ மெய்கண்ட தேவரது திருவாக்கு எத்துணைச் சிறப்புடையது. ஆதலின் அப்பரம்பொருளை அடைவதே மானுடப் பிறவியின் பயனாகும்.

"Man's final end, the purpose of his existence is to love, know and be united with the immanent & transcendent Godhead. (Aldous Huxley) என்ற மேனாட்டு அறிஞரின் வாக்கையும் ஒப்பிட்டு மகிழ்தல் நலம்.

இனி, அப்பரம்பொருளை எவ்வாறு அடையமுடியும்? உலகிலே வாழும்போது மனம், வாக்கு, காயங்களினாலே உண்டாகும் தீமைகளைப் போக்கித் தூய்மை பெற்று நன்மைகளைச் செய்து, பழகி வரவேண்டும். அதன் பயனாக உயிர்க்குயிராய் இருக்கும் பரம்பொருள் குரு

வடிவம் கொண்டு எழுந்தருளித் தீக்கை செய்து ஆன்மா வின் பெருமையினை உணர்த்தி அருளும். சிவ பரம் பொருளே குருவாக எழுந்தருளும் என்பது ஆகமத்தின் முடிபு.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி" என்ற திருமூல தேவநாயனார் வாக்கால் குருவும், சிவமும் ஒன் றெனத் தெளியலாம். இனி தீக்கை, சமயம், விசேடம், நிருவாணம் எனப் பலதிறப்படும். ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உச்சரிக்கும் முறையும் தகுதிக்கேற்பப் பல திறப்படும். ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் பெருமையினைத் திருமுறை ஆசிரியர் கள் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார்கள்.

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே"

என்று திருமூல தேவ நாயனார் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதுவதால் தீவினை நீங்கும் என்றும், சிவபோகம் விளையும் என்றும் ஆணை தந்தருளுகிறார். ஸ்ரீ பஞ்சாட்சரம் பிறவி யைக் கடப்பதற்குரிய 'புணை' என்பதாக மணிவாசகப் பெருமான் கூறுகிறார்.

இன்னும் "நானேயோ தவஞ் செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்" என்று அங்கலாய்க்கிறார். இத் துணைப் பெருமையுடைய ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஆசாரியர் உபதேசம் செய்தமுறையில் நாடோறும் ஓதிவந்தால் மனம் செம்மைப்பட்டுப் பொறிவழியே வெளியே ஓடாது உள்ளே யுள்ள பரம்பொருளை நாடும் என்பதாம். அப்பொழுது உள்ளத்திலே ஒரு ஆனந்தம் தோன்றும்.

"ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி உராத்துணைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத் தண் நிழலாம் பதி" என்று ஸ்ரீ மெய்கண்ட தேவர் பரம்பொருளைச் சிந்தையில் நாட வேண்டும் என்று வழி காட்டுகிறார்.

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே!
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி!
உள்ளவா காணவந் தருளாய்"

என்று மணிவாசகப் பெருமான் அகமுக நோக்கால் உண்டாகும் ஆனந்தத்தைக் கூறுகிறார்.

இவ்வனுபவ நிலை எய்திய பெருமக்கள் "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று உலக நிலைக்கு இறங்கி வந்து தொண்டு செய்கிறார்கள். தேவார ஆசிரியர்கள் அனுபவம் பெற்ற பெரியோர்கள். அவர்கள் திருவடி ஞானம் பெற்றபோதே சமாதியிலே நின்று வீடு பேற்றை அடைந்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் அவ்வாறு இருந்துவிடவில்லை. நாடெங்கும் திருக்கோயில்களுக்கு வழிபாட்டுக்குச் செல்லும்போது சமய நெறியினை விளக்கி வந்தார்கள். திருவீழிமிழலையில் அக்காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்க ஞானசம்பந்தப் பிள்ளையாரும் அப்பர் பெருமானும் செய்த செயல் திருமுறையால் அறியலாம். ஞானசம்பந்தப் பிள்ளையார் திருச்செங்கோட்டுக்கு வந்தபோது பனிப்பிணியால் மக்கள் வாடுவதைக் கண்டு மனம் பொறாது,

'அவ்வினைக் கிவ்வினை'

என்ற பதிகம்பாடிப் பனிப் பிணியைப் போக்கியருளினர். இனிக் குடும்பங்களிலே நேர்ந்த துன்பங்களையும் போக்கிய வரலாறும் பல உண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவிநாசியில் முதலைவாய்ப்பட்டு இறந்த பாலனை மீண்டும் கொண்டு வரச் செய்த செயல் எத்துணை அற்புதமானது.

ஆனால் இத்துணைச் செயல்களும் தங்களது செயலாகச் செய்யாது திருவருள் செயல் என்றே எண்ணிச் செய்தார்கள் என்பதை அறியும்போது அவர்களது பெருமை இன்னும் உயருகிறது.

"என்செய லாவதி யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப் பெற்றேன்"

என்ற பட்டினத்துப் பிள்ளையார் வாக்கு இங்கு நினைவு கூரத் தக்கது. ஸ்ரீ மெய்கண்ட தேவர் இதனை,

'ஏகனாகி இறைபணி நிற்றல்'

என்பார். தமக்கெனச் செயலின்றி இருத்தல் ஏகனாதல்; சிவன் செயல் என்று செய்தல் இறைபணி நிற்றலாம். இவ்வியல்பினால் ஆன்மாக்கள் சிவபரமபொருளோடு பிரிப்பின்றி நிற்கும் நிலை எய்தும் என்பதாம்.

'This identification of self with the spiritual not-self can be achieved only by dying to selfness and living to spirit' (Aldous Huxley) என்ற மேனாட்டு அறிஞர் வாக்கும் இக் கருத்துக்கு அரண் செய்கிறது.

"யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்றார் பொது நூலாசிரியராகிய திருவள்ளுவப் பெருந்தகையாரும்.

தமக்கென வாழாது பிறருக்காகவே தொண்டாற்றி வரும் அனுபவம் நிறைந்த பெருமக்கள் சிவனடியார்களைச் சிவன் எனவே போற்றி வழிபட்டார்கள் என்பது திருத்தொண்டர்புராணத்தில் பரக்கக் காணலாம். சிவ வேடத்தையும் சிவனடியாரையும் எத்துணை மதித்தார்கள் என்பது உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த புகழ்ச் சோழ நாயனார் வரலாற்றிலிருந்து அறியலாம். மன்னனது ஆணைப்படி பகைமேற் சென்ற வீரர்கள் பகையினை அழித்து அவரது சிரங்களைத் தாங்கி மன்னன் முன் சேர்ந்தனர். அச்சிரத்தில் ஒன்று அடியார் சிரமாக இருக்கக் கண்ட மன்னன், மனம் புழுங்கித் தீக்குளித்து அமருலகு எய்தினன் என்ற வரலாறு அடியார் பெருமையைக் காட்டுகின்றதன்றோ! அதுமட்டும் அல்ல.

சிவனுறையும் ஆலயத்தினையும் சிவன் எனவே வழி பட்டு வந்தனர். தேவார ஆசிரியர் மூவர் வரலாறும் இவ் வுண்மையினை வலியுறுத்தும்.

ஸ்ரீ மெய்கண்ட தேவர், "...அன்பரொடு மரீஇ மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்று அடியார் வேடத்தினையும், ஆலயத்தினையும் அரன் எனவே எண்ணி வழிபட்டு இறைவ னடி சேரவேண்டும் என்று இப்பிறவியின் பயனை வற் புறுத்துகிறார். பெருமக்கள் காட்டிய வழியே நின்று ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதி, அடியார் வழிபாடும், ஆலய வழி பாடும் முறையாகச் செய்து உய்தி பெறுவோமாக.

அனுபவம் நிறைந்த தவஞானச் செல்வர்களில் ஒருவ ராய் சிவஞானமே வடிவாய் அமைந்த நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் நம்மனோரை உய்விக்கு மாறு கருணையுள்ளங்கொண்டு எழுந்தருளியுள்ளார்கள். அவர்களது பொன்னார் திருவடிகளை வணங்கி வருக! வருக!! என்று வரவேற்கிறேன்.

ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு சொற் பொழிவாற்ற எழுந்தருளியுள்ள சைவப் பேரறிஞர்களையும் சமாஜ உறுப்பினர்களையும் வருக வருக என்று வரவேற்கி றேன். அடுத்து எங்கள் அழைப்புக்கு இணங்கி எழுந்த ருளியிருக்கும் சிவநேசச் செல்வர்களுக்கும் எங்கள் வர வேற்பு உரித்தாகுக.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களைத் தலைமை தாங்கி வழிகாட்டியருளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

திருச்சிற்றம்பலம்.

திருப்புறம்பயம்

(மு. அ.)

இடம் :—கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை செல்லும் பஸ் சாலையில் சுமார் 1½ மைல் சென்று புளியஞ்சேரி என்னும் ஊரிலிருந்து வடக்கே புறம்பயத்துக்குத் தனிச்சாலை பிரிந்து செல்கின்றது. 4 மைல் தூரம்; வழியில் திருஇன்னம்பர்; அப்பால் 3 மைல் புறம்பயம். ஊருக்கு வடகரையில் கொள்ளிடமும் தென்கரையில் மண்ணியாறும் உள்ளன. கோயிலுக்கு எதிரே கண்ணுக்கு எட்டிய தூரம்வரை வயல்கள். பாதை செம்மையடைந்து வருகிறது.

பெயர் :—புறத்தே நீர் உடைமையால் புறம்பயம். பயம் என்றால் நீர்; பிரளயநீர் தடைப்பட்டு உட்புகாதவாறு புறத்தே நின்றமையால் புறம்பயம். சுவாமி பெயர் சாக்ஷிநாதர், புறம்பயநாதர். அம்பிகை கரும்படு சொல்லம்மை. இப் பெயரைச் சம்பந்தர் பதிக 5ஆம் பாடலில் "ஓர் பாகம் கரும்பொடு படும் சொல்லின் மடந்தையை மகிழ்ந்தோய்" என்று பாடுகிறார். குறைவிலா அழகி என்றும் அம்பாளுக்கு மற்றொரு பெயர் உண்டு. தல விருட்சம் புன்னை. புறம்பியம் என்ற சொல் வடிவமும் உண்டு.

—நம் புறம்ப
யத்திற் கரும்படுசொல் லன்னத்தை ஓர்பாலில்
வைத்திருக்கும் சாட்சி வரதனே.

—(சிவநாமக் கலிவெண்பா)

கோயில் :—பெரிய கோயில், சிறப்பானது மதில்சுவரை ஒட்டி வெளியில் நீர்நிலை. நடுத்தரக் கோபுரம், உருவங்கள் இல்லை. நடராஜ சபையின் எதிரே தென்புறத்தில் நால்வர். இப்போது புதிதாக அழகிய தனி மண்டபத்தில் அமைக்கப் பட்டிருக்கிறார்கள். கோபுரத்தை அடுத்து தனி மண்டபத்தில் தனி அம்பிகை குகாம்பாள் என்ற நாமத்தோடு உள்ளாள். சோமாஸ்கந்தருக்காகத் தென்மேற்கு மூலையில் மிக்க விசாலமான மண்டபத்தோடு தனிக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கருப்பக்கிரக

வெளிப்புறக் கோட்டத்தில் உள்ள திருவுருவங்கள் யாவும் பின்னமாக்கப் பட்டுள்ளன.

மூர்த்தி :—விநாயகர் பிரளயங்காத்த விநாயகர் எனப் படுவார். இதற்கு அடையாளமாக, இவர் திருவுருவம் கடல்படு பொருள்களாகிய சிப்பி சங்கு கிளிஞ்சல் கடல் நுரை முதலியவற்றாலேயே அமைந்துள்ளது. பார்க்க வெண்மையாய் கிளிஞ்சலாகவே தெரியும். இவருக்கு அபி ஷேகம் இல்லை. விநாயக சதுர்த்தியில் இரண்டு குடம் (ஓர் ஆடம்) தேன் அபிஷேகம் மட்டும் செய்கிறார்கள். இவை இரவு 9 மணியிலிருந்து விடியும் வரை குருக்கள் பலர் மாறி மாறித் துணியைத் தேனில் நனைத்து விநாயகர் மீது அப்புகிறார்கள். தேன் முழுதும் விநாயகர் திருமேனி யில் சுவறிவிடுகின்றதாம். சுண்ணும்புப் பொருளைத் தேன் இறுகச் செய்யும் ஆற்றல் படைத்தது. இத்தேன் அபிஷேகத்தால், இந்த நுரை விநாயகர் இத்துணை நூறு ஆண்டுகள் கரையாமல் இருந்து வருகிறார்.

துவாரபாலகர் சுதை. மகாலிங்கம் பெரிய உருவம்; திருத்தமானது. கோட்டங்களில் இரு பிக்ஷாடனர்; பின்சுரகரமூர்த்தி, (நடராஜர்) அகத்தியர், யாவும் பின்னம், தக்ஷிணாமூர்த்தி அமைச்சலான உருவம் உடை யவர். மேல் நிலையில் சட்டநாதர். நிருதி விநாயகர், சத்தி விநாயகர் என்றும் நேத்திர விநாயகர் என்றும் பெயருடையவர். சொக்கலிங்கம் விசுவலிங்கம்; சனகாதி நால்வர் பூசித்த நான்கு லிங்கங்கள்; கஜலக்ஷ்மி—கஜங் கள் இருபுறமும் இருகால்களில் நிற்கின்றன; அகத்திய லிங்கம். பின்னர் பிரத்தியக்ஷநாதர் தனிக்கோயில். மூல வர் சாட்சிக்காக மதுரை போனபோது, இவர் வழி பாட்டை ஏற்று இருந்தவராம். மற்றக் கோட்டங்களில் காலசங்காரமூர்த்தி, துர்க்கை, கங்காவிசர்ஜனர், பிக்ஷா டனர், பிரமன் யாவும் பின்னம். சிம்மத்தோடு கூடிய புது துர்க்கை உருவம் பழைய துர்க்கையை மறைத்து வைக்கப் பெற்றுள்ளது. அலங்காரமான பெரிய உருவம். நால்வர் சிலை பெரிய உருவங்கள். உற்சவ மூர்த்திகளில் சம்பந்தர் மட்டும் மண்ணில் தோண்டி எடுத்ததாம். புதிய

மாதிரியான உருவம் தலையில் சுருண்ட கேசத்தோடு குழந்தைமுகம் கவர்ச்சி பொருந்தியது. திரிபுர சம்ஹார மூர்த்தியும் தனியே உள்ளார்.

சோமாஸ்கந்தர் நடுத்தரவடிவு, மிகப் பிரகாசமான திருமேனி; பழைய சிலைகள். சோமாஸ்கந்தர் கோயிலில் அம்பாள் சற்றே சுவாமிபக்கம் சாய்ந்திருக்கிறார். இம் மூர்த்தி ஒரு காலத்தில் தியாகராஜா என்று சிறப்புடன் ஆராதிக்கப் பட்டிருந்ததாம். இக் கோயில் வாயிலில் பல்லவர்காலத் துவாரபாலகர் பெரிய உருவம். நடராஜா வின் திருவாசி முழு வட்டமாயுள்ளது. நடராஜா காலை எதிரில் நேராகத் தூக்கி ஆடுகிறார். நேர் எதிர்ப்பார்வை. சிவகாமசுந்தரி மிக்க அழகுடைய திருவுரு.

முற்கூறிய குகாம்பாள் மண்டபம் நாகூர்ச்செட்டியார் என்ற ஒரு குடும்பத்தார் திருப்பணியாம். இவ்வம்பிகை அவர்களுக்கு வழிபடு கடவுளாய் உள்ளார். ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் உடைய முருகனை இடதுபுறம் அணைத்தெடுத்த கோலத்தில் குகாம்பாள் இருக்கிறார். சுதைவேலை; அபிஷேகம் இல்லை.

வரலாறு :—இத்தலம் பற்றிய வரலாறுகள் மிகப் பல: 1. திருமருகலில் சம்பந்தர் வணிகப் பெண்ணுக்காக வணிகனை உயிரெழுப்பிய வரலாறு, இங்கு நடந்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறும். இதில் கண்ட வன்னி யும் கிணறும் லிங்கமும் அழைத்த படலம் இவ்வாறு கூறுகிறது. புறம்பயம் பெருமான் மதுரை சென்று அப் பெண்ணின் கல்யாணம் பற்றிச் சாட்சி கூறியதனால் சாட்சிநாதர் எனப் பெயர் பெற்றார். இச்செய்தி சிலப் பதிகாரத்திலும், "வன்னிமரமும் மடைப்பள்ளியும் சான் றாக-முன் நிறுத்திக் காட்டிய மொய் குழலாள்" என்று வணிகப் பெண்ணின் கற்புடைமை பாராட்டிச் சொல்லப் பட்டுள்ளது. சிலப்பதிகாரம், சம்பந்தர் காலத்துக்கு முந்திய நூல் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர். அதிற் கூறப்பட்ட வரலாற்றைச் சம்பந்தர் நிகழ்த்தினர் என்று கூறுவது பொருந்தாது. இவ் வரலாறு பழமை

யான தமிழ்நாட்டு வரலாறுகளுள் ஒன்று. சம்பந்தரை இதில் தொடர்பு படுத்தித் திருவிளையாடற் புராணம் கூறுவது, கதையே அன்றி, வரலாற்றுக்குப் பொருந்தாது. இதுபோன்ற பின்னொரு நிகழ்ச்சி திருமருகலில் நிகழ்ந்தது. இதில் சம்பந்தர் தொடர்பு கொண்டு இறந்த வணிகனை உயிர்ப்பித்து மணம் புரிவிக்கிறார் என்று பெரிய புராணத்தால் நாம் அறிகிறோம்.

2 கோவந்தபுத்தூரிலிருந்து ஒரு தீண்டாத வகுப்பு விறகு தலையன், கோயிலுக்கு விறகு கொடுக்கும் வழக்கப்படி, ஒருநாள் கொள்ளிட வெள்ளத்தில் வரமுடியாமல், விறகுகட்டே தெப்பமாக மிதந்து வந்து, பெருமான் கட்டளைப்படி பரம தீர்த்தத்திலுள்ள நவ தீர்த்தங்களிலும் நீராடி முனிவராக மாறி இவ்வாலயம் வந்து வழிபட்டு முக்தியடைந்தான்

3. கோயிலுக்கு வெளிப் புறத்தில் தனிக் கோயிலில் ஒரு தக்ஷிணாமூர்த்தி இருக்கிறார். சனகாதி நால்வருக்கும் இங்கு பெருமான் அறம் உபதேசித்தார். "நால்வருக்கும் அறப்பயன் உணர்த்தினை புறம்பயம் அமர்ந்தோய்" என்ற திருவாசகத்தாலும், சனகாதியர் பூசித்த நான்கு லிங்கங்கள் இங்கு சிறப்பாக உள்ளமையாலும், இதை அறியலாம்

4. பிரளயங் காத்த விநாயகர் வரலாறு: பிரளய காலத்தில் பொங்கிவந்த சப்தசாகரங்களையும் பெருமான் அடக்கி வைத்தது நந்தவனத்திலுள்ள எழுகடல் கிணறு என்னும் சப்தசாகர தீர்த்தம் என்பர்.

5. இக் கோயில் பணிப்பெண் ஒருத்தி மாலையில் மண்ணியாற்றில் ஓடத்தில் போகும்போது ஓடக்காரன் இவளுடைய ஆபரணங்களைக் கவர்ந்துகொண்டு இவளை ஆற்றில் தள்ளிக் கொன்றுவிட்டான் என்ற ஒரு கதையைக் கூறி, சுந்தரர் பாடலை இதற்கு ஆதாரங் காட்டுகிறார்கள்.

குற்றொருவரைக் கூறைகொண்டு
கொலைகள் சூழ்ந்த களவெலாம்
சொற்றொருவரைச் செய்த தீமைகள்
இம்மையே வரும் திண்ணமே.

என்பது அவர் இவ்வூரில் பாடிய பதிகத்து ஒரு பாடல் (7578)

6. விசயாலய சோழன் மகன் ஆதித்த சோழன் (871-907) ஆட்சிக்கு வந்த புதிதில், வரகுண பாண்டியன் சோழநாட்டின்மீது படையெடுத்து வந்தான். போரில் ஆதித்தனுக்கு உதவியாகக் கங்கநாட்டு அரசன் முதலாம் பிருதிவிபதியும், தொண்டை நாட்டு மன்னன் அபராஜித வர்மபல்லவனும் நின்றனர். புறம்பயத்தில் நடந்த போரில் பாண்டியன் தோற்றோடினன். போர் முழுமையும் கொள்ளிடத்து மணலிலேயே நடந்ததென்பர். இதனால் சோழநாட்டில் புதிதாகிய சோழ பரம்பரை நிலைபெற்றுப் பின்னர் மிகப்பெரிய சாம்ராஜ்யமாக வளர இது கால் கோளாயிற்று. பிருதிவிபதி போரில் இறந்தான். அவனுக்காக நடுகற்கோயில் ஒன்றும் இவ்வூரில் தனியே உள்ளது; உதிரப்பட்டி என்ற நிலப்பகுதியும் அவனைக் குறித்ததே. உதவ வந்த அபராஜித வர்மனுடைய பெரும்படை போரில் அழிந்தது. ஆதித்தன் சிற்றரச நிலை மாறி, பல்லவராதிக்கத்தை விட்டு, இப்போரின் பின் பேரரசனான்.

விழா: பஞ்சபர்வ விழாக்கள். சிவபெருமான் சாட்சி சொன்ன வரலாறு, வைகாசியில் ஒரு நாடக விழாவாக வன்னி நாடகம் என்ற பெயரில் நடைபெறுகிறது.

பாடல்: மூவர் தேவாரமும் (3 பதிகங்கள்) உள்ளன. மாணிக்கவாசகர் குறிப்பு முன் காட்டப்பட்டது. அச்சாகாத புராணம், உலா, மாலை உள்ளன. பதிகம் முழுமையிலும் சம்பந்தர் "புறம்பயம் அமர்ந்தோய்" என்று விளித்தே பாடுகிறார்.

கல்வெட்டு: இந்நாடு இராஜேந்திரசிம்ம வளநாட்டு அண்டாற்றுக் கூற்றம் என்றும், சுவாமி ஆதித்தேசுவரர், கோயில் ஆதித்தேச்சுரம் என்றும் தெரிகிறது. செம்பியன் மாதேவியார் இதற்குப் பொருள் வழங்கியுள்ளார். வீதி விடங்கன் அவன் தம்பி அகிலநாயகன் என்ற விழுப்பரையர் இருவர் இங்கு அறமுரைத்த நாயனுருக்குத் (தக்ஷிணுமூர்த்தி) தனிக் கோயில் கட்டி வைத்தனர். முன்பு மகவிழா, வேட்டை விழா, பங்குனித் திருநாள் நடந்தன. தாமோதர விண்ணகரம் என்ற பெருமாள் கோயிலும் இருந்தது.

நிர்வாகம்: இக்கோயில் மதுரைத் திருஞான சம்பந்தராதீனத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. 1953இல் கும்பாபிஷேகம் நடந்தது.

சிறப்பு: குகாம்பாள், தீண்டாதாணுகிய விறகுவெட்டி வரலாறு, தனியான அறமுரைத்த நாயனுர் கோயில், விநாயகர் அபிடேகச் சிறப்பு, போர் வரலாறுகள் முதலியன.

தமிழ்த் தெய்வ வாழ்த்து

ஞானியார் சுவாமிகள்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆறும் ஆண்டு விழாவில் ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் ஞானியார் சுவாமிகள் பாடிய பின்வரும் பாடல்களை வாசித்தார்கள்; செந்தமிழ் தொகுதி 16, பக்கம் 195. இப்பாடல்களை சமாஜ அங்கத்தினரும் அறியும் பொருட்டு இங்கு வெளியிடுகின்றோம். (ஆசிரியர்)

தமிழ்த் தெய்வ வாழ்த்து

படிப்போர்க் கினிமை தருஞ்செவ்வி பரந்த மொழியிம்
மொழிபோல
வெடிப்பில் மொழியெம் மொழியோநீர் விளம்பும்
என்று கேட்கினெவர்
விடுப்ப இறைதான் முன்வருவர் விளங்குந் தெய்வத்
தமிழேநின்
தொடுத்த சரண மிசைக்கொண்டு தொழுதேம்
நினைத்தேம் வாழ்ந்தேமால். 1

ஓடிவி லன்பை வளர்ப்பதுவாய் ஓங்கும் பொருள்நிச்
சயம்செய்யும்
மடிவில் வளஞ்சேர்ந் தழியாது மாட்சி யெய்தும்
வனப்பினதாய்
அடியேம் பலர்க்கும் அருளமுதம் ஆர்த்தும் வளப்பம்
நிறைந்துளதாய்
கெடலில் தமிழ்த்தெய் வத்தைநிதம் கிளந்து
பணிந்து வாழ்ந்திடுவாம். 2

இறையை நீன்போல் தொண்டுசெய்ய இயற்றும்
மொழிதான் எம்மொழியோ
தறையில் சாந்தம் முதலியன சார்ந்தார் நின்னை
யடைந்தாரே
மிறைகள் முழுதும் அகற்றயெணின் விளங்குந் தெய்வத்
தமிழேநின்
குறைவில் வளஞ்சேர் மலரடியைக் குறுகி னேர்க்கே
கூடிடுமால். 3

பரனைத் துதிக்கும் பான்மையினில் பதிந்த வடியர்
மேலோனும்
வரமார் இறையைக் காட்டுவதால் வள்ளற் குருவுண்
மேலோனும்
திரமார் இறைமை எய்தியதால் தெய்வக் குழுவுட்
சிறந்தோனும்
புரைதீர் தெய்வத் தமிழேநீ புகலில் வேறு யாரேயோ. 4

தானம் செய்யும் தலைமையரில் தமிழ்க்குத் தொண்டு
செய்வோரே
மான வுலகிற் பெரியரென வானும் வணங்க விருப்பரெனில்
தேனி னினிமை மிகுந்ததமிழ்த் தெய்வ சரண மடியேற்கு
கான மலர்மா லையெனவே கடிதிற் பணிந்து வாழ்ந்
திடுவாம், 5

திருப்புகழ் மணி

(மு. அ.)

திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயரவர்கள் தமது 82 ஆவது வயதில் மயிலாப்பூரில் இறைவன் திருவடியடைந்தார்கள். அவரைப் பிரிந்த குடும்பத்தாருக்கு நம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் சென்னைவாசிகள் பலருக்கு வாழ்க்கையில் தெய்வமணம் கமழக் காரணமாயிருந்தவர் ஐயரவர்கள். இவர் கோடம்பாக்கத்திலுள்ள வடபழனி முருகப்பெருமானது ஆலயம் சென்று மாலை நேரத்தில் திருப்புகழ் பஜனை செய்வதை நியமமாய்க் கொண்டிருந்தார். பஜனை செய்த காலம், இவர் வழக்கறிஞர் துறையில் உச்ச நிலையில் நின்று, நிரம்ப வருவாய் உடையவராய், சென்னையில் மிகச் சிறந்த வழக்கறிஞருள் ஒருவராய் விளங்கிய காலம். மற்றவர்கள் தம் வேலைப் பெருக்கத்தாலும், வருவாய் மிகுதியாலும் இறைவனை வழிபட நேரம் இல்லை என்று சொல்வார்கள்; இவரோ, கையில் தாளம் ஏந்தி முருகன் சந்நிதியில் நின்று உருக்கமாய்த் திருப்புகழ்ப் பஜனை செய்து வந்தார். சர்வகலாசாலையில் பி.ஏ., பி.எல்., பட்டம் பெற்றவர், இவ்வாறு பஜனை செய்து ஆடியதைக் கண்டு, இவர் ஒரு பைத்தியம் என்று சொன்னவர்களை நாம் நேரில் அறிவோம். காலம் 1932–35ல் குதிரை வண்டியைச் சத்தத்துக்கு அமர்த்திக் கொண்டு மாலை நேரத்தில் சுமார் ஆறு மணிக்கு வடபழனிக் கோயிலை அடையலாம். பாதையோ பழக்கமில்லாதவர்களுக்குப் பெருத்த அச்சம் தரத்தக்கது. கோடம்பாக்கம் ரயிலடியில் இருந்து சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரம் ஜன சஞ்சாரம் இருந்ததில்லை; கோயிலைச் சுற்றியும் மக்கள் நடமாட்டம் இராது. அந்தக் காலத்தில் இவர் வாரம் ஒருமுறை வெள்ளிக்கிழமைதோறும் அங்குச் சென்று பஜனை செய்வார். இவர் பஜனையில் கலந்து கொள்ளவும் கேட்கவுமென்றே ஓரளவு திரளாக மக்கள் வந்து கூடுவார்கள். இவருடைய பழக்கத்தால் சுமார் நூறுபேர் வரை நன்றாக ஈடுபட்டுத் திருப்புகழ் பாட வல்லவர் ஆகியிருந்தார்கள். அருணகிரிநாதர் பாடிய திருவகுப்புக்

கள் பலவற்றை இவர் தாளத்தோடும் இசையோடும் பாடுவதுண்டு. இவருக்கு விருப்பமான பாடல்களில் ஒன்று தேவேந்திர சங்க வகுப்பு. பலதாள வின்னியாசங்கள் அதில் அமைந்திருக்கும். இவர் பாடிப் பாடிப் பல கால் கேட்டிருந்த பக்தர்கள் தாங்களும் கலந்து பாடி ஆடுவது, கடல் அலைகள் கோஷித்து ஒன்றன் பின் ஒன்ருக வந்து மோதுவது போலிருக்கும். நேரில் கண்டவர்கள் நினைவைவிட்டு என்றும் அகலாத ஒரு காட்சி அது. இருந்த இடமே தெரியாமல் இருந்த இக்கோயிலை இவர் தம்முடைய பஜனை மூலமாக அக்காலத்தில் பல ஆயிரம் ரூபா வசூலித்துக் கல் திருப்பணி செய்வித்தார். இவர் வாழ்வு முழுமையும் முருகனே வியாபித்திருந்தான்.

கிருஷ்ணசாமி ஐயர் திருவையாற்றில் பிறந்தவர். முறையாகத் தஞ்சை ஜில்லாவிலும், சென்னையிலும் படித்து வழக்கறிஞர் பட்டம் பெற்று முதல் வரிசையிலுள்ள வழக்கறிஞருள் ஒருவராகத் தொழில் நடத்தி வந்தார். சென்னை உயர்நீதி மன்றத்திலும் இந்திய சுப்ரீம் கோர்ட்டிலும் இவர் வழக்கறிஞராயுள்ளவர். சில காலம் திருவனந்தபுரம் உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியாகவும் இருந்தவர்.

இளமையிலேயே இவருக்கு வள்ளிமலையில் வாழ்ந்த திருப்புகழ் சாமி என்று பெயர் பெற்றிருந்த சுவாமி சச்சிதானந்தாவின் தொடர்பு ஏற்பட்டு, திருப்புகழ் இசையோடும், தாளத்தோடும் பாடுவதில் ஈடுபடலானுர். இவருடைய பக்திப் பெருக்கைக் கண்டு 1928 இல் திருப்புகழ்மணிஎன்ற பட்டத்தை அவர் இவருக்கு அளித்தார். இருபதாம் நூற்ருண்டின் இடைப் பகுதியில் ஆங்கில அறிஞர்களிடையே திருப்புகழ்ப் பஜனை பாடுவதற்கு இவரே காரணமாயிருந்தார். இந்தக் காலத்தில் திருப்புகழை எல்லோரும் பாடுகிருர்கள். திருப்புகழ் பஜனையில் கலந்து கொள்வதை நாகரிகம் என்று எல்லோரும் கருதும்படி செய்தவர் இவர். மேலும் சமீப காலத்தில் திருப்புகழ் திருப்படி விழாவைப் பல ஆண்டுகள் இவரே முன்

னின்று சிறப்புற நடத்தி வைத்தார். சில காலமாகத் திருத்தணிகை மலையில் அடியார்கள் ஒவ்வொரு படியிலும் நின்று, முறையாக ஒவ்வொரு பாடல் சொல்லி கற்பூர ஆராதனை செய்து கொண்டு மேற்சென்று முருகனை தரிசிக்கச்செய்தார். இப்போது முருகன் எழுந்தருளியுள்ள எல்லாக் கோயில்களிலும் இவ்வாராதனை அடியார்கள் முயற்சியால் வழக்கத்துக்கு வந்து விட்டது.

திருப்புகழைப் பக்திப் பரவசத்தோடு தாம் பாடிப் பரப்பி வந்ததோடு இவர் முருகன் மீது பல பஜனைப் பாடல்களும் கீர்த்தனைகளும் பாடியிருக்கிறார்.

திருப்புகழ் மணியின் சேவை, திருப்புகழைப் பாடுவது படிப்பறிவு இல்லாத பாமர மக்களுடைய விவகாரம், இதில் கல்வி கற்றாருக்கு வேலை இல்லை என்றிருந்த நிலைமையை மாற்றி, கல்வியாளரும், பெரிய பதவி வகித்தோரும் மனமாரத் திருப்புகழ்ப் பஜனையில் ஈடுபடச் செய்ததாகும். எண்ணற்ற இல்லங்களில் முருகபக்தி புகுந்தது; தமிழ்ப் பாடல் இடங்கொண்டது. மக்கள் தெய்வ பக்தியுடையவரானார்கள். ஒருமுறை இவர் பஜனை செய்யக் கண்டவர்களும், கேட்டவர்களும் அதைப் பின்னர் நோக்கவியலாது தம் வாழ்க்கையில் புனிதமான ஓர் அநுபவமாய் இதைக் கருதுவார்கள்.

இவர்தம் வாழ்க்கையில் நல்லவர்களுடைய தொடர்பு நிரம்பப் பெற்றிருந்தார். டி. கே. சிதம்பரநாத முதலியாரிடம் அளவில்லாத அன்பு பூண்டிருந்தார். காரணம் அவருடைய தமிழ்ப் பக்தியே டி.கே.சி. அவர்கள் சென்னையில் வாழ்ந்தபோது (1938–44) நாமும் அவர்களோடு நெருங்கிப் பழகியதுண்டு. இரு ஆண்டுகளுக்குமுன். ஒரு நண்பர் வீட்டுத் திருமணத்தில் திருப்புகழ் மணியைச் சந்திக்க நேர்ந்தது. சந்தித்த போது 'நமஸ்காரம், அருணாசலம், ஞாபகமிருக்கலாம்' என்றவுடன் இப் பெரியார் அப்படியே இரு கைகளாலும் தழுவிக்கொண்டு, 'நன்றாகச் சொன்னீர்கள், டி. கே. சி. யவர்களுடன் கலந்து உறவாடியதெல்லாம் மறக்க முடியுமா?' என்று சொல்லித் தழு

வியபடியே நெடுந்தூரம் பேசிக் கொண்டே வந்தார்கள். பழமையிலும், சத்சங்கத்திலும், தமிழ்ப் பக்தியிலும் எவ்வாறு இவர் தோய்ந்திருந்தார் என்பதை இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் தெரிவிக்கும். இவருடைய எளிமையான பண்புக்கும் இது எடுத்துக் காட்டாகும்.

திருப்புகழ் மணியின் நினைவும் அவர் தந்த திருப்புகழ் மணமும் அன்பர்கள் மனத்தில் என்றும், புதிதாய் நிலவிக் கொண்டிருக்கும் என்பது தெளிவு. திருப்புகழ் மணியின் நாமம் வாழ்வதாக.

உ

சிவமயம்

ஓர் ஐய வினா

(கயப்பாக்கம். சோமசுந்தரம் செட்டியார்)

பல்லாண்டுகளாக, இனவெறி, மொழிவெறி நம்மிடம் புகுவதற்குமுன், ஒருவர் இறையடி யெய்தினால் (சைவரை மட்டும் குறிப்பது) அவருக்குரிய இறுதிக்கடன்களை [சடங்குகளை] யவரவர் வருண, ஆச்ரமத்திற்குரிய முறையில், அந்தணர்களும், தமிழ்த் தேசிகர்களும் செவ்வையாய் நடத்திவந்தார்கள். இச்சடங்குகளால் உயிர் நீத்தவரும் இறையடியை எய்தியிருப்பார் என்பது உறுதி. சிலர் இச்சடங்கு நிகழ்ச்சியைப் பலருக்கும் அழைப்பிதழ் மூலம் அறிவிப்பது முண்டு. அந்த அழைப்பின் தலைப்பு: (1) "சுபஸ்வீகரணப் பத்திரிகை"=இழந்த சுபத்தைத் திருப்பி அடைதல் என்பது பொருள். (2) "உத்தரகிரியைப் பத்திரிகை"=இறுதிச் சடங்குகளைத் தெரிவித்தல் என்பது பொருள்.

சென்ற சில ஆண்டுகளாக வடமொழிவெறுப்பும், அந்தணரிடம் வெறுப்பும் ஏற்பட்ட காரணத்தால், மேலே குறித்துள்ள அழைப்பிதழைப் பின்வருமாறு அச்சிட்டு அனுப்புகிறார்கள்: "நீத்தார் கடன்" "நீத்தார் வழிபாடு" இவை பொருந்துமா? அத்தலைப்பின் பொருளை

நன்குணர்ந்துதான் அவ்வாறு செய்கிருர்களா? அல்லது வடமொழி வெறுப்பின் காரணமாக அவ்வாறு செய்து வருகிருர்களா? அவ்வாறு செய்தால் முற்காலத்தின் பொருளை இத்தலைப்பு சரிவர அன்பர்களுக்கு உணர்த்துமா? என்பதே என் ஐயம். அன்பர்கள் இவ்வையத்தைத் தெளிவிப்பார்களாக.

இனி—''நீத்தார்'' யார் என்று எழுதி முடிக்கிறேன்.

பொதுமறை, உலகமறை, பொய்யாமொழி ஆகிய திருக்குறளில், அறத்துப்பால் பாயிரம், 3 வது அதிகாரமாக அமைந்துள்ளது ''நீத்தார் பெருமை'' ஆகும். அந்த அதிகாரத்திற்குப் பரிமேலழகர் பின் வருமாறு உரை எழுதியுள்ளார் :

நீத்தார் பெருமை

''அஃதாவது முற்றந்துறந்த முனிவரது பெருமை கூறுதல்; அவ்வற முதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறுணர்த்துவார் அவராகலின், இது வான் சிறப்பின் பின் வைக்கப்பட்டது.

ஒழுக்கத்து நீத்தார்பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

இ—ள் : ஒழுக்கத்து நீத்தார் பெருமை=தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தாரது பெருமையை—விழுப்பத்து வேண்டும் பனுவற்றுணிவு=விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிதென விரும்பும் நூல்களது துணிவு.

''தமக்கு உரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தலாவது,—தத்தம் வருணத்திற்கும் நிலைக்குமுரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும், அறம் வளரப் பாவந் தேயும், பாவந்தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்த அநித்தங்களது வேறுபாட்டுணர்வும், அழிதன் மாலையவாய இம்மை மறுமை இன்பங்களினுவர்ப்பும் பிறவித்துன்பங்களுந் தோன்றும், அவை தோன்ற வீட்

டின் கண்ணுசையுண்டாம், அஃதுண்டாகப் பிரிவுக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக்காரணமாகிய யோக முயற்சி யுண்டாம், அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்ருகிய எனதென்பதும் அகப்பற்ருகிய யானெனன்பதும் விடும், ஆகலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே யுவர்த்துவிடுதலெனக் கொள்க. "..................."

இவ்வாறே ஏனைய குறள்பாக்களுக்கும் அன்னார் உரையினைப் படித்துக்கொள்க. விரிவஞ்சி முழுவதையும் இங்கு எடுத்துக் கூறவில்லை.

குறிப்பு: மேலே குறித்துள்ள இலக்கணங்கள் அழைப்பிதழில் குறித்துவரும் அன்பர்களுக்குப் பொருந்துமா என நன்கு சிந்தித்து முடிவு செய்வார்களாக!

மதிப்புரை

"மதுராபுரி அம்பிகை மாலை" என்னும் சிறு நூல் ஒன்று வரப்பெற்ருேம். கிடைக்குமிடம் :- க. இராமநாதப் பிள்ளை, 3. சாம்பசிவம் தெரு, தி.நகர், சென்னை–17 விலை பை. 15. தபாற் செலவு வேறு.

இதனை இயற்றியவர் குலசேகரப் பாண்டியன் என்பவர் ஆவர். இந்நூல் அபிராமி அந்தாதிக்குரிய மூலநூல் என நம் சித்தாந்த இதழில் சென்ற ஐப்பசி மாதம் ஒரு கட்டுரை நம் சித்தாந்த ஆசிரியர் திரு. மு. அருணுசலம் அவர்கள் எழுதி வெளியிட்டிருந்ததை அன்பர்கள் பார்த்திருக்கலாம். அதன் பலனுகவே சக்தி தாசன் கோவூர். திரு. க. இராமநாதப் பிள்ளையவர்கள் இதனை நன்முறையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். மதுரை மீனுட்சியம்மையின் அருளுக்குப் பாத்திரமாக்கவல்ல ஒரு சிறந்த நூல் இஃதென்பதில் எட்டுணையும் ஐயமின்று. காப்புச் செய்யுள் 1, நூல் 30, நூற்பயன் 1 ஆக 32 கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களைக் கொண்டுள்ளது. சைவப் பெருமக்கள் யாவரும் வாங்கிப் படித்து அம்பிகையின் னருளுக்குப் பாத்திரமாவார்களாக. (அம்பை)

குமரகுருபரன் பதினெட்டாவது ஆண்டு மலர் வரப்பெற்றோம். இது 18 கட்டுரைகளைத் தன்பாற் பெற்றிலங்குகின்றது. அவற்றுள் மூன்று கட்டுரைகள் ஆங்கிலத்தின்பாற் பட்டவை. பிற மொழியறிஞரும் நம் தமிழ், சைவ சித்தாந்தம் பற்றித் தெரிந்து கொள்ள இவை வாய்ப்பாயிருக்கின்றன. பல தமிழகப் பெருமக்களின் கட்டுரைகள் இம்மலரை அணி செய்கின்றன. ஆதலின் இது மணமுடை இதழாகக் காட்சியளிக்கின்றது. அருள் திரு அருள்நந்தியடிகளாரின் அருட்பார்வையின் கீழ் நிகழும் ஒவ்வொரு செயலும் சிறப்புற்றோளிரும் என்பதில் ஐய மென்னே? யாவரும் இவ்விதழுக்கு உறுப்பினர்களாகி வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக. ஆண்டுச் சந்தா ரூ 3–00. அனுப்ப வேண்டிய முகவரி :– ஆசிரியர், "குமரகுருபரன்", ஸ்ரீ வைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம். (அம்பை)

வாலாசாபாத் இந்துமத உயர்பாடசாலை பொன் விழா மலர் வரப்பெற்றோம். அப்பள்ளியின் உயர்வுக் கேற்ப அளவற்ற பெரியோர்களின் திருவுருவப் படங்களைக் கொண்டதாய் 336 பக்கங்களில் அப்பள்ளி வரலாற்றின் பல கோணங்களிலிருந்து அறியத்தகும் செய்திகளையும் அறிவிக்க வல்லதாய் 88 பக்கங்கள் விளம்பரமும் 24 பக்கங் கள் முன்னுரையும் கொண்டு மிகச் சிறந்த முறையில் இம் மலர் அமைந்துள்ளது. அண்மையில் அப் பள்ளியின் பொன் விழா நிகழ இருந்தது. புயல் முதலிய சில இன்றி யமையாக் காரணங்களால் அந்நிகழ்ச்சி ஒத்தி வைக்கப்பட் டுள்ளது. அவ்விழாவுக்கென ஆயத்தப் படுத்தியது இம் மலராகும். காலம் கடத்தலின் உரிய காலத்தே மக்கள் இம்மலரின் மணத்தைத் துய்க்கட்டும் எனப் பாடசாலை யினர் வெளியிட்டுள்ளனர் போலும். இப்பாடசாலையின் 1916–66 ஆண்டுகட்கிடைப்பட்ட சிறந்த வரலாறு இம் மலராகும். விலை குறிக்கப் பெறவில்லை. (அம்பை)

"உய்யும் வழி" என்னும் நூல் ஒன்று வரப் பெற்ளேம். இது வல்லநாடு அருள் திரு சிவ ராமலிங்க சுவாமிகள் அவர்கள் விரிவுரைகளின் தொகுப்பாகும். சுவாமிகள் வடமொழி, தென் மொழியில் சிறந்த புலமை மிக்கவர்; மேலும் பல்லாயிரவவரைப் பெருமான் பக்தித் திறத்துச் செலுத்திய பெருமையுமுடையவர். அவர்கள் ஆற்றிய ஆறுவிரிவுரைகளுடன் அவர்கள் மேல் அடியார்கள் இயற்றிய பல தோத்திரங்களேயும் இந்நூல் கொண்டுள்ளது. இஃது அம்பா சமுத்திரம் சி. இராமையா முதலியார் அன் பிரதர்ஸால் தங்கள் தமையனுர்களின் நினேவுக்குறியாக வெளியிடப்பெற்றுள்ளது. இது மக்களேப் பக்தித்துறையில் செலுத்தவல்ல ஒரு நன்னூல். விலே குறிக்கப்பெறவில்லே,

(அம்பை)

"சிவபுராணச் சிற்பம்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்ளேம். இதன் பதிப்பாசிரியரும், உரையாசிரியரும் திரு. பி. எஸ். வரதராஜ ஐயர் ஆவர். கிடைக்குமிடம்: P. S. Varadaraja Iyer, 120. B Rash Bihari Avenue, Calcutta-29. விலே ரூ 1-00. தபாற் செலவு வேறு.

இந்நூல் திருவாசகத்திலுள்ள சிவபுராணத்திற்கு விரிவுரை போன்று அமைந்துள்ளது. இந்நூலிலிருந்து இதன் ஆசிரியர் திருவாசகத்தில் மிகவும் ஈடுபாடு உடையவர் என்பது தெரிகிறது. தான் பெற்ற இன்பத்தைப் பொதுவாகத் தமிழன்பர்களும் சிறப்பாகக் கல்கத்தாவில் வாழும் தமிழன்பர்களும் பெற வேண்டும் என்ற நோக்கத்தால் இந்நூல் எழுதப் பெற்றது போல் தெரிகின்றது.

நூல் அமைப்பு முறையெனக் கொண்டு பதி (1-25) பசு (26-50) பாசம் (51-58) ஆண்டான் தோன்றி அடிமையை ஆட்கொள்வது (59-83) ஆண்டான் ஆட்கொண்டதால் ஏற்பட்ட விளைவு (84-91) நூற் பயன் (92-95) இவ்வாறு சிவபுராணப் பகுதியைப் பிரித்து விளக்கி எழுதிச் செல்லுந் திறம் மெச்சத்தககது. சைவ சித்தாந்த சமய ஈடுபாடு, வைணவ சமய சித்தாந்த ஒப்பு நோக்கும் திறம் முதலிய பண்புகளும் இந் நூலில் காணக் கிடைக்கின்றன. இப் பெரியார் மாணிக்க வாசகர் காலம் 9 ஆம் நூற்றுண்டு எனற கொள்கையுடையவர் போல் தெரிகிறது. "கல்லாய் மனிதராய்" முதலிய சில பகுதிகளில் பொருள் விளக்கமில்லை. இருப்பினும் இம்முயற்சி ஆசிரியர் குறிக்கோளுக் கேற்ருற் போல் பலரும் படித்து மேம்பாடடையத் தூண்டு கோலா யிருக்கும் என்பதுறுதி. யாவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக (அம்பை)

சமாஜச் செய்திகள்

நம் சமாஜச் சார்பில் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் அறக்கட்டளையின்படி திருநீலகண்ட நாயனுர் விழா திருமயிலை கபாலீச்சுரத்தில் (2—2—67) மாலையில் நிகழ்ந்தது திருவையாறு ஸ்ரீ அண்ணுஸ்வாமி சிரௌதிகள் "திருநீலகண்ட நாயனுர்" பற்றி விரிவுரையாற்றினுர்கள். அன்றுமாலையிலேயே திருவான்மியூர் மருந்தீஸ்வரர் ஆலயத்தில் நம் சமாஜ உறுப்பினர் வித்துவான் திரு ந. சீனிவாச முதலியார், (சர் தியாகராயர் கல்லூரிப் பள்ளித் தமிழ் ஆசிரியர், வண்ணை) அவர்கள் "திருநீலகண்டர்" பற்றி விரிவுரையாற்றினுர்கள்.

கீழ்க்காணும் அன்பர்கள் சமாஜப் புது ஆயுள் உறுப்பினர்களாயுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவர்கள் விவரம் வருமாறு :—

திரு K. A. P. விஸ்வநாதன் அவர்கள்,
திருச்சி-8

திரு N. பாலாஜி அவர்கள்,
S/o. B. நாராயண செட்டியார்
பூவாளூர் அஞ்சல்,
லால்குடி,
திருச்சி மாவட்டம்.

வித்துவான் அம்பை. இரா. சங்கரனார் அவர்கள்,
"அம்பையகம்"
7A/1, கோவிந்தன் ரோடு,
மேலை மாம்பலம்,
சென்னை-33.

வித்துவான் பி. சொ. சண்முகம் பிள்ளை அவர்கள்,
44C/2, வேளாளர் தெரு,
புரசைப்பாக்கம்,
சென்னை-7.

கா. பாலசுப்பிரமணியன் அவர்கள்
மாரியம்மன் கோயில் தெரு,
புன்செய்ப் புளியம்பட்டி,
கோவை மாவட்டம்.

P. முத்துக் கவுண்டர் அவர்கள்,
வெள்ளைத் தோட்டம்,
கருணைபாளையம்,
வேலாயுதம்பாளையம் அஞ்சல்,
அவிநாசி வழி,
கோவை மாவட்டம்,

இவர்கள் போன்று பிற பெருமக்களும் ரூ 50/- செலுத்தி ஆயுள் உறுப்பினராமாறு அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.

(துணைச்செயலாளர்)

திருமணம்

★

புன்செய்ப் புளியம்பட்டி அரசினர் பெரும்பள்ளி ஆசிரியரும் நம் சமாஜப் பேரன்பருமாகிய திரு பு. கா. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் திருமதி க. சானகி யம்மையார்க்கும் திருமணவிழா 22—1—67 ல் சிறப்புற நிகழ்ந்தது. புது மணமக்கள் எல்லா நற்பேறுகளுமுற்று இந்நிலவுலகில் நீடுவாழ உமையொருபாகன் தண்ணருளை வழங்க அவன் தாளிணைகளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

(துணையாசிரியர்)

செந்தமிழில் நல்ல சிவநெறியில் ஆர்வமிக்கார்!
நந்தம் மறைமலையார் நல்லன்பர்! — முந்திளைய
தோன்றல் எழிற்பால சுப்ரமண்யம், சானகிதான்
ஏன்றனிது வாழ்க! இயைந்து.

புன்செய்ப் புளியம்பட்டிப் பூத்த தமிழ்இளைஞர்!
பொன்செய் குணங்கள் பொருந்திநிற்போர்! — நன்செயலார்
பாலசுப்ர மண்யமும், பண்புமிகு சானகியும்
சீலமிக வாழ்க! சிறந்து.

துன்று தமிழ்ப்பால சுப்ரமணியம், சானகிதான்
அன்பின் மணவழகர் ஆகின்றார்!—நன்றுமிக
ஒல்லை, உயர்சோமாஸ் கந்தநிலை உற்றிவர்கள்
நல்வகையில் வாழ்க! நயந்து.

—ந. ரா. முருகவேள்.

உ

சிவமயம்

சென்னை, சைவ சித்தாந்த மகா சமாஜம்

61-வது ஆண்டு விழா வரவேற்புக்குழு, திருச்சி.

மாநாட்டு வரவு, செலவு விபரம்

வரவு

திரு.	கி. ஆ. பெ. விசுவநாதம்	ரூ. 101-00
,,	G. வரதராஜப் பிள்ளை	200-00
,,	H. தாண்டவராய பிள்ளை	100-00
,,	S.K.K. மாணிக்கம் செட்டியார்	25-00
,,	M. ரெங்கசாமி பிள்ளை	25-00
,,	L. AR. அருணசலம் பிள்ளை	101-00
,,	R. ஜெயதேவன் செட்டியார்	25-00
,,	AT. நாச்சியப்பச் செட்டியார்	10-00
,,	A. சுப்பராயலு செட்டியார்	25-00
,,	வீ. உலகநாதன்	25-00
	A. P. அருணசலம் செட்டியார் சன்ஸ்	101-00
	திருச்சி அருள்நெறித் திருக்கூட்டம்	101-00

செலவு

தபால்	ரூ. 19-55
அச்சுக்கூலி	590-00
தேவர் மன்றம் வாடகை	180-00
சொற்பொழிவாளர்கள் சன்மானம்	479-50
விளம்பரம்	130-35
சாப்பாட்டு வகை	569-80
ஓதுவார்கள் சன்மானம்	70-00

	M/s பர்மா கெமிக்கல் டைமண்ட்ஸ்	250-00
	M/s மாரியப்பா ஸ்டோர்ஸ்	51-00
,,	ஆ. பொன்னுசாமி பிள்ளை	50-00
,,	J. M. சாமி	50-00
,,	M. A. அருணாசல முதலியார்	75-00
,,	R. கிருஷ்ணசாமி ரெட்டியார்	100-00
,,	T. துரைராசு பிள்ளை	50-00
,,	P. R. நாராயணசாமி அய்யர்	50-00
	மௌனகுரு வழிபாட்டுக் கழகம்	100-00
,,	T. M. முத்துசாமி பிள்ளை	50-00
,,	L. A. பரமன் செட்டியார்	25-00
,,	கூடப்பள்ளி செல்லமணி அம்மாள்	75-00
	திருச்சி சைவ சித்தாந்த சபை	50-00
,,	N. சுப்பிரமணியன் செட்டியார்	25-00
,,	K. ராஜகோபால் பிள்ளை	25-00
	M/s பழனியப்பா பிரதர்ஸ்	100-00
	பூவாளூர் சைவ சித்தாந்த சபை	101-00
,,	மு. சுப்பிரமணியன் செட்டியார்	50-00
,,	சா. பெரியசாமி	50-00
,,	R. கிருஷ்ணசாமி ரெட்டியார், டிரஸ்டி	150-00

போக்குவரத்துச் செலவு	6-74
டிபன், காப்பி, சோடா	23-83
ஒலி, ஒளி, சீன்	90-00
பூமாலைகள்	35-00
மேளம்	35-00
வாழை, தோரணம்	45-87
யானை	8-00
சில்லரை (Misc)	60-42

,, N. S. S. கணபதியா பிள்ளை	25-00		
புத்தகம் விற்று வரவு	52-0)	மீதி இருப்பு	48-94
மொத்த வரவு ரூ,	2393-00	மொத்த ரூ.	2393-00

அரிசி வழங்கியவர்கள்

திரு. அப்புலிங்கம்	42 படி
,, G, வரதராஜ பிள்ளை	20 படி
,, A.P.A. வேங்கடாசலம் செட்டியார்	20 படி
மௌனமடம்	10 படி
மொத்தம்	92 படி

மாநாடுகள் சிறப்புற நடைபெறப் பல்லாற்ருனும் ஒத்துழைத்த யாவர்க்கும் வரவேற்புக் குழுவினரின் மனமுவந்த நன்றி உரித்தாகுக.

தலைவர் :
G. வரதராஜ பிள்ளை, B.A.,

பொருளாளர் :
L. AR. அருணசலம் பிள்ளை.

செயலாளர் :
சொ. கிருஷ்ணன்.
தி.சு. சிவப்ரகாசம்.

துணைத் தலைவர்கள் :
ஆ. பொன்னுசாமி பிள்ளை,
கி. ஆ. பெ. விசுவநாதம்.

வருந்துகிறோம்

சைவப் பெரியார் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் முதன் மகனார் திரு ச. சந்திரசேகரம் பிள்ளையவர்கள் 4—1—67 அன்று இவ்வுலகினின்று மறைந்தார்கள். 13—1—67 அன்று மோக்ஷதீபமும் நிகழ்ந்தது. சமாஜச் சார்பில் தலைவர் வித்துவான் திரு கோ. மு. முத்துசாமிப் பிள்ளை, I.A.S. (ஓய்வு), திரு C. N சிங்காரவேல் முதலியார், வித்துவான் திரு வை. குஞ்சிதபாதம் பிள்ளை, வித்துவான் அம்பை. இரா. சங்கரனார் முதலியோர் காலஞ்சென்ற அப்பெரியாரின் சிறப்பியல்புகள் பற்றிப் பேசி அவர் ஆன்மா இறைவன் திருவடி நீழலில் அமைதி பெற வேண்டி வழுத்தினர்.

சமய வாழ்வே தம் வாழ்வெனக் கருதி அல்லும் பகலும் அனவரதமும் உழைத்து வரும் நம் ஒப்புயர்வற்ற பெரியார் பிள்ளையவர்களுக்குத் தம் முதுமைக் காலத்து முதல் மகனை இழந்தது மிகவும் வருத்தத்துக்குரிய நிலையாகும். பிள்ளையவர்கள் சிறந்த சமய ஞானியாதலின் அவர்களுக்கு எடுத்துக்கூறி அமைதியுறுத்தவேண்டிய நிலையில் இல்லை. இருப்பினும் "கடந்த மாமுனிவரும் கடப்பரோ மக்கள் மேற் காதல்" என்ற விதிக்கு நம் பிள்ளையவர்கள் மாத்திரம் விதிவிலக்காயிருக்க இயலாது.

ஆகவே எல்லாம் இறைவன் திருவருள் என நினைத்து அமைதியில் நாட்டம் கொள்ள பிள்ளையவர்களையும் அவர் குடும்பத்தினரையும் வேண்டிக்கொள்வதுடன் காலஞ்சென்றஅப்பெரியாரின் ஆன்மா இறைவன் திருவடிநீழலில் இன்பமார்ந்திருக்கஅவன் திருவருள் புரியவாழ்த்திவணங்குகின்றோம். காலஞ்சென்ற அப்பெரியாரின் நினைவாக கந்தர் அனுபூதி . பகை கடிதல், குமாரஸ்தவம், சண்முக கவசம் அடங்கிய சிறு இலவச வெளியீடு ஒன்று அதே நாளில் வெளியிடப்பெற்றது.

(துணையாசிரியர்)

உ

சிவமயம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்
(தொடக்கம்: 1905—பதிவு: 1915)

61-வது ஆண்டு அறிக்கை

சைவ சித்தாந்த மகா சமாஜம் முதன் முதலில் திருப்பாதிரிப்புலியூரில் தவத்திரு. ஞானியாரடிகள் திருமடத்தில், அவர் முன்னிலையில் மறைமலை அடிகளாரால், விசுவாவசு ஆண்டு, ஆனித் திங்கள் 24-ஆம் நாள் (7-7-1905) வெள்ளிக்கிழமை தொடங்கப்பெற்றது. இன்றுவரை இறைவன் திருவருளால் மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்க வேண்டுமென்ற பெரு நோக்கத்துடன் தொண்டாற்றி வருகின்றது. எஸ். 6/1915-16 என்ற எண்ணில் இச்சமாஜம் 11-11-1915ஆம் தேதியில் சபைகளுக்குரிய பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப்பெற்றுள்ளது.

2. இவ்வாண்டின் சமாஜப் பணியாளர்கள்

தலைவர்	:	திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ஓய்வு)
துணைத் தலைவர்கள்	:	திரு. ராவ்சாகிப் நல். முருகேச முதலியார், பி.ஏ.
		திரு. ராவ்பகதூர் – க. அரங்கசாமி முதலியார், பி.ஏ.
பொதுச்செயலாளர்	:	திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு.
துணைச் செயலாளர்	:	திரு. மு. நாராயணசாமி முதலியார்.
பொருட்காப்பாளர்	:	திரு. எஸ். இராமசாமி.
பத்திராசிரியர்	:	திரு. மு. அருணசலம், எம்.ஏ.

துணைப் பத்திராசிரியர் : வித்துவான் திரு. அம்பை - இரா. சங்கரனார்.
மாதக் கணித பரிசோதகர் : திரு. சி. வா. கிருஷ்ணமூர்த்தி.
ஆண்டுக் கணித பரிசோதகர் : எஸ். டி. குமார், பி.ஏ.

செயற்குழுவினர் : திருவாளர்கள்-(1) அ. சோமசுந்தரம் செட்டியார், எம்.ஏ., (2) ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., (3) ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., (4) பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம்.ஏ., (5) பெ.திருஞான சம்பந்தம் பிள்ளை, எம்.ஏ., எல்.டி., (6) க. வடிவேலாயுதம், எம். ஏ., (7) நே. த. கிருஷ்ணசாமி, எம். ஏ., பி. டி., (8) கொ. நீ. சிங்காரவேலு, எம்.ஏ., (9) வித்துவான்-பி. சொ. சண்முகம் பிள்ளை, (10) வித்துவான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை, (11) எம். சந்திரசேகர முதலியார், (12) கே. எல். பழநிசாமி, பி.ஏ., எல்.டி.

3. அறுபதாண்டு நிறைவு வைர விழா

நம் சமாஜத்தின் அறுபதாண்டு நிறைவு வைர விழாவும் சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர், சைவப் புலவர் மாநாடுகளும் 31-12-65, 1-1-66, 2-1-66 ஆகிய மூன்று நாள்களிலும் சைவப் பெருமக்களுக்கே கோயில் என்று புகழத்தக்க சிதம்பரத் திருத்தலத்தில் இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் சிறப்புற நிகழ்ந்தன. இம்மாநாடுகளுக்கு அருள் மொழி அரசு திருமுருக. கிருபானந்தவாரியார், திருமதி. இராதா தியாகராசன், திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம்.ஏ., எல்.டி. ஆகியோர் முறையே தலைமை தாங்கினர். தென்ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் திரு. டி.வி. வாசுதேவன், ஐ.ஏ.எஸ். கொடியேற்றினர். திரு. ஆர். கனகசபை, எம்.பி. வரவேற்புரை நிகழ்த்தினர். தமிழ்நாடு சட்டசபைத் தலைவர் திரு. எஸ். செல்லப்பாண்டியன், பி.ஏ., பி.எல். திறப்புரை யாற்றினர். வைர விழா மலர், சிவஞான போதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல, முருக வழிபாடு, கூட்டு வழி

பாட்டுப்பாமாலை, தத்துவப்பிரகாசம், திருவாசகக் குறிப்புகள், திருவருட்பயன் நிரம்ப அழகிய தேசிகர் உரையுடன் ஆகிய ஏழு நூல்களும் வெளியிடப்பெற்றன. அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களால் ஆங்கில முத்திங்களிதழாய 'சைவ சித்தாந்தா' சமாஜச் சார்பில் வெளியிடப்பெற்றது. இம்மாநாட்டில் சூரியனார் கோயிலாதீனம் மீனாட்சிசுந்தர தேசிகர் அவர்கள் நாற்பது பேர்களுக்குச் சமய தீட்சையும் சிவபூஜையும் செய்து வைத்ததும் இராமசாமிச் செட்டியார் உயர்பள்ளி மாணவர்கள் ஏற்படுத்திய சமயப்பொருட்காட்சியும் சிறப்பு நிகழ்ச்சிகளாம். இவ்விழாவைச் சிறப்புற நடத்தித் தந்த திரு. ஆர். கனகசபை எம்.பி., திரு. இரத்தினசாமிச் செட்டியார், டாக்டர் கே. அரங்கசாமிப் பிள்ளை, திரு. என் எம். பொன்னம்பலம் பிள்ளை, திரு. பு. ர. சுவாமிநாதன் முதலிய யாவருக்கும் சமாஜம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

4. சைவ சமய குரவர் விழாக்கள்

13-5-66ஆம் தேதி செஞ்சொற் புலவர் திரு. பி. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் 'திருநாவுக்கரசர்' பற்றியும், 5-6-66 ஆம் தேதி திருச்சி வித்துவான் ஆர். பஞ்சநதம் பிள்ளையவர்கள் 'திருஞானசம்பந்தர்'பற்றியும், 26-6-66ல் வித்துவான் வை. குஞ்சிதம்பாதம் பிள்ளையவர்கள் 'மாணிக்கவாசகரும் திருவாசகமும்' பற்றியும், 25-7-66-ஆம் தேதி வித்துவான் அம்பை. இரா. சங்கரனார் அவர்கள் 'சுந்தரர் செந்தமிழ்' பற்றியும் விரிவுரையாற்றினார்கள். இவ்விரிவுரைகள் யாவும் கபாலீச்சுரத்திலேயே நிகழ்ந்தன.

5. சேக்கிழார் விழா

25-5-66-ஆம் தேதி திருமயிலைக் கபாலீச்சுரத்தில் நாகர் கோயில் வித்துவான் சி. குமரேசப்பிள்ளையவர்கள் 'சேக்கிழார்' பற்றி விரிவுரையாற்றினார்கள்.

6. அருணந்தி சிவாச்சாரியார் விழா

11-10-66ல் இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ., அவர்கள் தலைமையில் திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார், எம்.ஏ., 'சிவஞான சித்தியார்' பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

7. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் சமயக் கட்டளை

மேற்குறித்த சமயக் கட்டளைப்படி, 24—4—66-ல் திருமயிலை வெள்ளீச்சுரர் திருக்கோயிலில் வித்துவான் அம்பை. இரா. சங்கரனார் அவர்கள் 'மங்கையர்க்கரசியார்' பற்றியும், 2-5-66-ல் கபாலீச்சுரத்தில் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் 'உமாபதி சிவம்' பற்றியும் 10-6-66-ல் இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணியபக்தஜன சபையில் புலவர் ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். அவர்கள் 'பாம்பன் சுவாமிகள்' பற்றியும் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

8. இளையான் குடிமாறர் விழா

13-9-66 ல் திருவொற்றியூர் படம்பக்கநாதர் ஆலயத்தில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் சயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் 'இளையான் குடிமாற நாயனார்' என்னும் பொருள் பற்றி விரிவுரை யாற்றினார்கள். இவ்விழா திரு. கே. இ. அருணாசல முதலியார் அவர்கள் ஆதரவால் நிகழ்ந்தது.

9. மணி விழா

நம் சமாஜச் சார்பில் சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி., அவர்களுக்கும் சமாஜச் செயலாளர் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கும் மணிவிழாப் பாராட்டும், பழநி திரு. க. அரங்கசாமி முதலியார்

அவர்களுக்கு எண்பதாண்டு நிறைவு விழாப் பாராட்டும் 30-10-66 ஞாயிறு மாலை திரு. வி. க. மணிமண்டபத்தில் சிறப்புற நிகழ்ந்தன. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் பல பெருமக்கள் விழாப் பெரியோர்களை வாழ்த்திப் பேசினர்.

10. சித்தாந்த சாத்திரக் கோடை வகுப்பு

தஞ்சை மாவட்டம் மஞ்சக்கொல்லையில் நம் சமாஜச் சார்பில் 25-5-66 முதல் 5-6-66 முடிய திருஞானசம்பந்த சபையார் சித்தாந்த சாத்திரக் கோடை வகுப்பை நடத்தினர். சித்தாந்த ஆசிரியர் திரு. மு. அருணாசலம் அவர்கள் தொடக்க வுரை யாற்றினர். சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், பி.ஏ.,எல்.டி. சித்தாந்த சாத்திரவகுப்பை நடத்தினர். இவ்வகுப்பில் இவ்யாண்டு திருக்களிற்றுப்படியார் கந்தரனுபூதி ஆகிய இவ்விரு நூல்களும் பாடமாக நடத்தப் பெற்றன. திரு. இராம. சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்கள் மிக ஊக்கத்துடன் இவ்வகுப்பு நடத்தும் பொறுப்பைத் தம் சபை சார்பில் ஏற்றுக்கொண்டார்கள்.

11. காலைக் கூட்டு வழிபாடு

மலேயா திரு. கா. இராமநாதஞ் செட்டியார் தொடக்கி வைத்த காலைக் கூட்டு வழிபாடு தினமும் மயிலைக் கபாலீச்சுரர் ஆலயத்தில் நிகழ்ந்து வருகிறது. வழிபாட்டில் தவறாது சில அன்பர்கள் கலந்துகொள்கின்றனர். சமாஜ உறுப்பினர்கள் சிலர் அவ்வப்போது வாய்ப்பு நேரும் அமயம் கலந்துகொள்வர்

12. திருத்தொண்டர் புராண விரிவுரைகள்

ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6-30 மணிக்குச் சென்னை லிங்கிச்செட்டித் தெருவிலுள்ள ஸ்ரீமல்லிகேச்சுரப் பெருமான் திருக்கோயிலைச் சார்ந்த சபைக் கட்டடத்தில் சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம் - திரு. சோமசுந்தரஞ் செட்டி

யார் அவர்கள் சமாஜ ஆதரவில் பெரிய புராண விரிவுரை நிகழ்த்தி வருகிறார்கள். இதற்குரிய செலவு கட்டிட டிரஸ்டு நிதியிலிருந்து திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் கொடுக்கின்றார்கள்.

13. சமாஜத் தேர்வு

1966ஆம் ஆண்டு 10 பேர்கள் சைவப் புலவர் தேர்விலும் 27 பேர்கள் இளஞ் சைவப் புலவர் தேர்விலும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, நாவலப்பட்டி, நாகர் கோயில், திருச்சிற்றம்பலம், திருப்போரூர் ஆகிய இடங்களில் தேர்வுகள் நிகழ்ந்தன. விவரம் பின்னர் சித்தாந்தத்தில் வெளி வரும்.

14. ஆங்கிலப் பத்திரிகை 'சைவ சித்தாந்தா'

நம் சமாஜத்தின் அறுபதாண்டு நிறைவு விழாவின்போது ஆங்கிலப் பத்திரிகை "சைவ சித்தாந்தா" முத்திங்களிதழாய்த் தொடங்கப்பெற்றது. இதன் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு திறம்பட நடத்திவரும் சமாஜத் துணைத் தலைவர் ராவ்சாகிப் நல். முருகேச முதலியார் அவர்களுக்கும், பல்லாற் றானும் உதவி வரும் சமாஜத் தலைவர் கோ. மு. முத்துசாமி பிள்ளையவர்கட்கும் நன்றியுரியதாகுக. இது தக்க கட்டுரை யாளர்கள் பலரால் எழுதப்பெறும் கட்டுரைகளைக் கொண்டு பல ரும் போற்றப்பெறும் நிலையிலுள்ளது. கடல் கடந்தும் நம் சம யத்தைப் பரப்ப இதனைப் போன்ற வேறொரு வாயில் இல்லை. அதற்கு உறுப்பினர் குறைபற்றித்தான் வருந்த வேண்டி யிருக் கிறது. தற்போது 410 உறுப்பினர்கள் தாம் உள்ளனர். சமாஜ உறுப்பினர்கள் யாவரும் இவ்விதழை வெளிநாடுகளிலோ அல்லது தில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பகுதிகளிலோ உள்ள நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களை இவ்வித முறுப்பினர் ஆக்கின் மிக நன்மையாயிருக்கும்.

15. புதிய உறுப்பினர்கள் சேர்க்கை

வாலாசாபாத் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் சென்ற ஆண்டுபோல் இவ்யாண்டும் ஒரே சமயத்தில் 111 உறுப்பினர்களைச் சேர்த்தார்கள். அதுபோல இல்லாவிடினும் தத்தம்மாலியன்ற அளவு சமாஜ உறுப்பினர்களை அதிகப்படுத்த பிற உறுப்பினர்கள் முயலின் நன்று. திரு. வா. தி. மா. அவர்களுக்கு நம் சமாஜத்தின் நன்றி உரித்தாகுக.

16. பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்கள்

இவ்யாண்டு பொது உறுப்பினர் கூட்டம் மூன்றும், செயற்குழுக் கூட்டம் பன்னிரண்டும் நடைபெற்றன.

17. பொருள் நிலை

60ஆவது ஆண்டு 1-12-65 முதல் 30-11-66 முடிய உள்ள வரவு செலவுக் கணக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடுகள் இதனுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டட டிரஸ்ட் வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடும் இதனுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

18. விண்ணப்பம்

இவ்யாண்டு சமாஜத்திற்கு ஒரு சமயக் கட்டளை உருப்பெற்று பணியைச் செய்து கொண்டிருக்கிறது. இதனைப் போன்று திரு. க. இராமநாதன் செட்டியார் அவர்கள் பெயரில் ஒரு சமயக் கட்டளை நிறுவும் திட்டமுள்ளது. அதற்கு ஒரு ஆயிரம் சேர்ந்ததும் உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். அப்பணம் 760ம் தற்போது பாங்கியில் போடப்பட்டு இருக்கிறது. சமாஜப் பணி இன்னும் சிறக்க, இடமில்லாக் குறை நிரந்தரமாக இருந்துகொண்டு வருகிறது.

சமாஜக் கட்டடத்திற்கென திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் வாங்கித் தந்த மூன்று கடைகளுள.

மணவி. திரு. இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் கட்டட நிதிக்கு ரூ. 6000 வழங்க முன் வந்து 4000 தந்துள்ளார்கள். மீதி ரூ. 2000 எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் பலரும் முன் வந்து இந்நெடு நாளைய குறையைப் போக்க முன் வருவார்களாக.

சமாஜ உறுப்பினர் எண்ணிக்கை தற்போது 1035 (ஆயுள் உறுப்பினர் 145, பிறர் 890) ஆக உள்ளது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் சித்தாந்த இதழ் இலவசமாக அனுப்பப்பெறுகிறது. பழம்பெருமை படைத்த இந்நிலையத்திற்கு உறுப்பினர் எண்ணிக்கை மிகவும் குறைவு என்பது கூறாமலே தெரியவரும். ஆதலின் இவ்வெண்ணிக்கையைப் பெருக்க ஊக்கம் கொள்ள வேண்டுகிறோம்.

19. நன்றி

இம் மகா சமாஜத்தைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்த உயர்திரு. மறைமலையடிகளார், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திரு. ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை ஆகியோருக்கு சமாஜம் வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

'சித்தாந்தம்' பத்திரிகைக்கும் 'சைவ சித்தாந்தா' என்னும் ஆங்கிலப் பத்திரிகைக்கும் கட்டுரைகள் எழுதியனுப்பி உதவிய அன்பர்களுக்கும், மற்றும் பல்லாற்றானும் சமாஜப் பணியிலீடுபட்டு வரும் அன்பர்கள் யாவருக்கும் சமாஜம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது. சமாஜப் பணி சிறக்க, சைவம் தழைக்க சிராப்பள்ளி மேய நன்றுடையான் அருள்புரிவானாக.

செயற்குழுவினர் அனுமதிப்படி

இங்ஙனம்

சென்னை
25—12—'66

தி. கி. நாராயணசாமி நாயுடு
மு. நாராயணசாமி
செயலாளர்கள்

'சைவ சித்தாந்தா' ஆங்கில முத்திங்கள் இதழ்

1—12—65 முதல் 30—11—66 வரை

வரவு செலவுக் கணக்கு

வரவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
முன் கையிருப்பு	108	45	காகிதம் வாங்கியது	746	90
முன் வங்கியிருப்பு	5	00	அச்சுக்கூலி	1259	68
சந்தா வரவு	1748	68	தபால் செலவு	297	96
விளம்பரம்	185	00	எழுதுபொருள் முதலியன	11	33
வட்டி	9	09	பணியாளர் சம்பளம்	165	00
சித்தாந்தம் பொதுக் கணக்கிலிருந்து தற்காலிகக் கைப்பற்று	795	00	விளம்பரச் செலவு	14	40
			வண்டிச் செலவு	32	41
			இதர செலவுகள்	29	10
			கையிருப்பு	5	77
			வங்கியிருப்பு	288	67
	2851	22		2851	22

எஸ். டி. குமார், ஆண்டுக் கணித பரிசோதகர்.

சி. வா. கிருஷ்ணமூர்த்தி, மாதக் கணித பரிசோதகர்.

எஸ். இராமசாமி, பொருளாளர்.

தி. கி. நாராயணசாமிநாயுடு,
மு. நாராயணசாமி,
செயலர்கள்.

சைவ சித்தாந்த மகா சமாஜ 61-ஆம் ஆண்டு வரவு செலவுத் தொகுப்பேடு
(1—12—65 முதல் 30—11—66)

வரவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
ஆரம்பக் கையிருப்பு	12	26	அச்சுவகை	1497	00
வங்கி யிருப்பு [S. B. Account]	814	68	காகிதம் முதலியன	671	76
தவணை வைப்பு நிதி	9350	00	தவணை வைப்புநிதி	11,350	00
சந்தா முதலியன	2798	15	தபால் வகை	477	02
ஆயுள் சந்தா	1950	00	போக்கு வரவு	197	93
வங்கி வட்டி	695	23	1965 ஆம் ஆண்டுவிழா	459	66
நன்கொடை	264	00	அலுவலக மின்சாரக் கட்டணம்	30	00
வைர விழா விளம்பர வரவு	630	00	எழுத்துவகைச் சாமான்களும் பிறவும்	62	86
ஆண்டு விழா வரவு	670	00	1965 ஆம் ஆண்டின் தேர்வுப் பரிசு	50	00
வைர விழா மலருக்கும் ஆங்கில			ஆங்கிலப் பத்திரிகைக்கு மாற்றம்	795	00
இதழுக்கும் வரவு	150	00	வைர விழா மலர் அச்சு வகை	701	63
திரு. கா. இராமநாதன் செட்டியார்			சிறப்பு நாட்கள் மணிவிழா முதலியன	335	82
நினைவு நிதி	760	00	ஆங்கிலப் பத்திரிகையின் வரவு		
தேர்வுக் கட்டணம்	19	00	திருப்பித் தந்தது	120	00
புத்தக விற்பனை மொத்த வரவு	945	26	புத்தக விற்பனை மொத்த செலவு	945	26
புத்தக விற்பனை நிகர வரவு	323	57	கையிருப்பு	11	53
			வங்கியிருப்பு [S. B. Account]	1676	68
	19,382	15		19,382	15

சமாஜத்தின் தற்காலப் பொருள் நிலை

	ரூ.	பைசா
வைப்பு நிதி விவரம் :		
மணலி. திரு. இராமகிருஷ்ண முதலியார் தந்தது	4000	00
மலேயா சைவ சித்தாந்த சபையார் தந்தது	1000	00
சைவத் தேர்வுப் பரிசுக்கு ஓர் அன்பர் தந்தது	1000	00
சமயக் கட்டளைக்குத் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை தந்தது	1000	00
1963 ஆம் ஆண்டிலிருந்து சேர்ந்த சமாஜ ஆயுள் உறுப்பினர் தொகை	2850	00
சமாஜ இருப்புத் தொகை	1500	00
மற்றைய நிதி விவரம் :		
ஆங்கிலப் பத்திரிகைக்குக் கடனாகத் தந்துள்ளது	1036	19
கையிருப்பு	11	53
வங்கியிருப்பு	1676	68
கையிருப்புப் புத்தகங்கள் (விற்பனை) மதிப்பு	3788	90
	17,863	30
கட்டட டிரஸ்டுக்குத் தரவேண்டியது	400	00
நிகர பொருள் நிலை	17,463	30

எஸ். டி. குமார், ஆண்டுக் கணித பரிசோதகர்.

சி. வா. கிருஷ்ணமூர்த்தி, மாதக் கணித பரிசோதகர்.

எஸ். இராமசாமி, பொருளாளர்.

தி.கி. நாராயணசாமி நாயுடு,
மு. நாராயணசாமி,
செயலர்கள்.

சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டட டிரஸ்ட்
(எண் 2, 3, 4, ஈவினிங் பஜார் கடைகள்) வரவு செலவுத் தொகுப்பு
1—12—65 முதல் 30—11—66 வரை

வரவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
முன் ரொக்க இருப்பு	651	22	சமாஜ அலுவலக வாடகை	300	00
முன் வங்கி இருப்பு	221	06	தேவார ஆசிரியர் சம்பளம்	960	00
வாடகை வரவு	2319	00	கார்ப்பொரேஷன் வரி	503	50
வட்டி வரவு	13	08	அர்பன் நிலவரி 1373—74 பசலி	92	80
			பெரிய புராண விரிவுரை	247	50
			திருப்பாசுரம் அச்சிட	79	05
			திரு. க. வச்சிரவேல் முதலியார் மணிவிழா நன்கொடை	50	00
			நெமிலி வார வழிபாட்டுச் சபைக்கு நன்கொடை	100	00
			பின் ரொக்க இருப்பு	498	67
			பின் வங்கி இருப்பு	372	84
	3204	36		3204	36

சென்னை
17—12—66

எஸ். டி. குமார்,
கணித பரிசோதகர்

அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.,
கட்டட டிரஸ்ட் தலைவர்

முருகன் அச்சகம், சென்னை-14